ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

स्वर्गद्वारावरणदलने यत्पटु प्रोक्तमार्यैः
दानं सद्भ्यो मृड सुदिवसे पुण्यमन्त्रं च जप्यम् ।
त्वत्पादाब्जार्चनमिति मया तत्र किंचिद्यथावत्
नाकारि त्वच्चरणशरणस्स्यां यथेच्छं कुरु त्वम् ॥ १४ ॥

𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌵𑌰𑌣𑌦𑌲𑌨𑍇 𑌯𑌤𑍍𑌪𑌟𑍁 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌾𑌰𑍍𑌯𑍈𑌃
𑌦𑌾𑌨𑌂 𑌸𑌦𑍍𑌭𑍍𑌯𑍋 𑌮𑍃𑌡 𑌸𑍁𑌦𑌿𑌵𑌸𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌜𑌪𑍍𑌯𑌮𑍍 ।
𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌬𑍍𑌜𑌾𑌰𑍍𑌚𑌨𑌮𑌿𑌤𑌿 𑌮𑌯𑌾 𑌤𑌤𑍍𑌰 𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑍍𑌯𑌥𑌾𑌵𑌤𑍍
𑌨𑌾𑌕𑌾𑌰𑌿 𑌤𑍍𑌵𑌚𑍍𑌚𑌰𑌣𑌶𑌰𑌣𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌂 𑌯𑌥𑍇𑌚𑍍𑌛𑌂 𑌕𑍁𑌰𑍁 𑌤𑍍𑌵𑌮𑍍 ॥ ௧௪ ॥

ஸ்வர்க்கமென்று கூறப்பட்ட உத்தமமான ஸ்தானத்திற்குள் புகுவதற்கு இடையூறாக வாயற்படி துவாரத்தில் இருக்கும் கதவைப் பிளப்பதில் மிகவும் சக்திபொருந்திய தாகப்பெரியோர்களால் அறிவிக்கப்பட்ட புண்யதினங்களில் ஸாதுக்களையும்பொருட்டு தானம் செய்வது, மிகவும் பவித்ரங்களான மந்திரங்களை ஜபிப்பது, உமது பாதாரவிந்தங்களை அர்ச்சிப்பது முதலான ஸாதனங்களில் விதிப்படி ஒன்றுவது ஸரியாய் என்னால் அனுஷ்டிக்கப்படவில்லை. ஹே ம்ருட! ஹே சங்கர! உமது சரணங்களையே சரணமாக அடைந்துவிட்டேன். நீர் உமதிஷ்டம்போல் எவ்விதம் செய்தாலும் செய்யும்.

ஒரு மனிதன் உத்தமமான பதவியையடையவேண்டுமானால் அதற்குச் சாஸ்திரங்களில் பல ஸாதனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்விதம் கூறப்பட்டிருக்கும் ஸாதனங்களில் விதி தவறாமல் ஒரு ஸாதனமாவது என்னால் அனுஷ்டிக்கப்படவில்லை. உத்தமஸ்தானத்தை அடையவேண்டுமென்று விருப்பம் அதிகமாக இருக்கின்றது. அதையுத்தேசித்து ஹே சங்கர! உம்மைச் சரணாகதியாக அடைந்தேன், என்னிஷ்டத்தைப் பூர்த்திசெய்தாலும் ஸரி, அல்லது வேறுவிதம் செய்தாலும் ஸரி, உம்முடைய அபிப்பிராயப்படி செய்கிறது என்று ஒரு பக்தர் பகவானிடம் பிரார்த்திக்கிறார். சுபம்.

உபபததிராதிபர்,

ஆர்ய தர்மம்.
விபவ-ஞு புரட்டாசி-மீ ௨

# ஐயவிஞு.

சென்ற 1928 ஆகஸ்டு 15உ புதன்கிழமை மித்திரனில் 3-வது பக்கத்தில் பண்டிதமாளவியாவின் ஆதரவு என்றும் தலையங்கமிட்டு, ஸ்ரீகாசி லக்ஷ்மிநாராயணன்கோயிலில் தொழ தீண்டத் தகாதவரெனப்படுவோர்களுக்கும் உரிமையளித்ததற்காக தாம் மிகுந்த திருப்தியடைவதாகவும், இச்செய்கை முற்றிலும் ஹிந்து சாஸ்திரோக்தமானதாக இருக்கிறதென்றும் செத்தியமுனலாய் பஜாஜிற்குப் பண்டிதமாளவியா ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார் என்று வரையப்பட்டிருக்கின்றது.

தற்காலம் இவ்வுலகிலுள்ள பல்வேறு ஜனங்கள் யாதாகிலும் ஒரு பாஷையில் தமக்கு அற்பஞானமேற்பட்டிருந்தால் அதைக் கொண்டு ஸகல வேதசாஸ்திரங்களிலும் தங்களைச் சிறந்த பண்டிதர்களாகக் கருதிக்கொண்டு தோன்றியபடியெல்லாம் தர்மோபதேசம் செய்ய முன்வந்துவிட்டார்கள். அவ்விதம் வந்தவர்களில் சிலர் சாஸ்திரங்களை மேற்கோளாகக் காட்டாமலும் அவைகளுடைய கருத்தையும அற்பமேனும் அங்கீகரிக்காமலும் உலக நன்மையின்பொருட்டுத் தாங்களாகவே தம் புத்தி வலிமையைக் கொண்டு சிரமப்பட்டுக் கண்டுபிடித்த தர்மசூக்ஷ்மம் இது என்று சாஸ்திரசிஷ்டாசாரங்களுக்கு நேர்விரோதமாயிருக்கும் பல அதர்மங்களை தர்மமென்று பிரமித்து அவைகளை எவ்விதமாவது ஜகத்தில் ஸ்தாபிப்பதே இப்பிறவிக்குற்ற முக்யமான பயனென்கிற நோக்கத்துடன் பத்திரிகைகளின் வாயிலாகவும் பல மேடைகளில் செய்யும் பிரஸங்கங்களாலும் ஆஸ்திகர்களான வைதிகர்களின் மனத்திற்குக் கூறவியலாத அதிக வருத்தத்தையுண்டு பண்ணுகிறார்கள் என்பதும் வெளிப்படையே. இவ்விதம் வேறு ஒரு பிரமாணத்தையும் எதிர்பாராமல் தம் புத்தியிலுதிப்பதே வேதத்திற்கு மேலான சிறந்த பிரமாணமென்று நினைத்து வெளி

யிடுகிறவர்களுடைய விஷயத்தை நாம் கவனிக்கவோ அவர்களிடம் அதைப்பற்றிக் கேட்கவோ நியாயமில்லை. கனம் பண்டித மாளவியா அவர்கள் அளித்திருக்கும் ஆதரவில் நாராயணன் கோவிலில் தொழத் தீண்டத்தகாதவரெனப்படுவோர்களுக்கும் உரிமையளித்ததற்காகத் தாம் மிகுந்த திருப்தியடைகிறேம் என்று முந்திக்கூறி பிறகு இச்செய்கைமுற்றிலும் ஹிந்துசாஸ்திரோக்தமாக இருக்கிறதென்றும் கூறியிருக்கிறார்கள்.

இவர்களால் வெளியிடப்பட்டதில் இரண்டாவதான ஹிந்து சாஸ்திரோக்தம் என்கிற விஷயத்தில் எனக்குச் சங்கைஏற்படுகின்றது. அஃதாவது — ஹிந்து சாஸ்திரமென்றால் எதென்று கனம் மாளவியா அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்களென்று புலப்படவில்லை. அநாதிகாலமாய் ஆஸ்திக வைதிக கோஷ்டிகளில் ஆதரிக்கப்பட்டு வருகின்ற சுருதி, ஸ்மிருதி, புராணம், சிஷ்டாசாரம், முதலியவைகளையே ஹிந்து சாஸ்திரங்களாகக் கருதியிருந்தால் இவ்விதம் கூற நியாயமில்லை. அவைகளில் முக்கியமாயும் முதலாவதாயும் கூறப்பட்ட சுருதியில் தீண்டாத ஜாதி என்று ஒரு ஜாதி உண்டென்றும் அதிக பாபங்களைச் செய்கிறவர்கள் அந்த ஜாதியில் ஜனிக்கிறார்கள் என்றும், பிரகதாரண்யம், சாந்தோக்யம் முதலான உபநிஷத்துக்களில்வெளியிடப்பட்டிருக்கின்றது. இதை விட்டுத் தீண்டாதவர்களும் இதர ஹிந்துக்களுக்காக ஏற்பட்ட ஆலயங்களில் உட்புகுந்து பகவானை தரிசிக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை. பின்னையும்தான் ஸ்மிருதி என்றும் பிரமாணத்தைக் கவனித்தாலும் அதிலும் இவர்களுக்கு இதர நான்கு வர்ணங்களுக்காக ஏற்பட்ட தேவாலயங்களில் சென்று தர்சனம்செய்யவேண்டுமென்று விதியிருப்பதாகத்தோன்றவில்லை. இவர்கள் ஆலயத்திற்குள் பிரவேசிக்க அருகமில்லாதவர்களென்றும் பல வசனங்களிருக்கின்றன. அவையாவன

**अयोगवश्च क्षत्ता चण्डालश्चाधमजो नृणाम् । म १०-१६.**

அயோகவஶ்ச க்ஷத்தா சண்டாலஶ்சாதமஜோ ந்ருணாம் । ம ௧௦-௧௬.

ஆயோகவன், க்ஷத்தா, சண்டாளன், இம்மூன்று பெயர்களும் மானிடஜாதிகளில் தாழ்ந்தவர்களென்றும் மனு பத்தாவது அத்தியாயத்தில் மொழிந்திருக்கிறார். இவ்விதம் கூறி பிறகு சண்டாளர்கள் மேலான நான்கு ஜாதியார்களுடன் சேர்ந்துவசிப்பது

முதலான காரியங்கள் செய்யக்கூடாதென்றும் அவர்கள் இருக்க வேண்டிய ஸ்தானத்தையும், இயற்கையாக அனுஷ்டிக்கவேண்டிய தர்மங்களையும் அடியில் வருமாறு அவரே வெளியிடுகின்றார்.

(தொடரும்)

உபபத்திராதிபர்

---

## அகில பாரதவர்ஷீய ப்ராம்மண மஹா ஸம்மேளனம்.

ஸநாதநதர்மமெனப் போற்றப்படும் வைதிகதர்மங்கள் தற்கால முன்னேற்றத்திற்குமுற்றிலும் மாறானதெனசிலரும் அதைக் காலத்திற்கேற்றபடி மாற்றி அமைத்தல் நலமென சிலரும், முற்றிலும் அப்படியே அனுஷ்டித்தல் வேண்டுமென சிலரும், ஏற்றதைக்கொள்வோம், மற்றதைத் தள்ளுவோம் எனச் சிலரும், கூறி வருகின்றனர். இச்சமயத்தில் இதுதான் உசிதமெனக் கூறி அதையே எல்லோரும் கைப்பற்றும்படிச் செய்ய ஆற்றல் படைத்த ஒருவர் இல்லாததால் "ஸங்கே சக்தி: கலௌயுகே" என்றபடி ஓர் வித்வத்பரிஷத் கூடுதல் அவசியமாகிறது. பண்டிதரென்போர் பண்டைய ஆசாரத்தையே போற்றுவர். தற்கால ரீதியை கவனியார் எனக் கூறும் பழியை யழிக்க லௌகிக ப்ரமுகர்களையும் ஒன்று சேர்த்து உண்மையாக முனிவர்களது கொள்கைகளுக்கும் சாஸ்திரங்களின் நோக்கத்திற்கும் மாறுபடாது இக்காலத்தில் இஹபரஸாதனமான தர்மங்களைத் தீர்மானித்தல் உசிதமன்றோ?

இதே கொள்கையைக் கொண்டு புனிதமான காசி க்ஷேத்திரத்தில் கார்த்திகை கிருஷ்ண நவமி முதல் (5-11-28) மூன்றுதினங்கள் ஷை மஹாஸபை நடத்த வடநாட்டில் ஓர் பெரும் இயக்கம் தோன்றியிருக்கிறது. அதிக செல்வாக்குள்ள ஓர் வரவேற்பு கமிட்டியும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரே சங்கத்தால் பத்தாயிரம் (10000) ரூபாய் நன்கொடையுமளிக்கப் பட்டிருக்கிறது.

அதன் தலைவர் மஹாராஜாதிராஜ காசீ மஹாராஜ ஸ்ரீ ப்ரபு நாரயணஸிம்ஹ பஹதூர் அவர்கள். ஸ்ரீமான்களான சசிசேகராய்,

ராய்ப்பஹாதூர் ராமேஸ்வராநாதானீ, வைதிகமடாதிபதிகள், கல்கத்தா ஸநாதன தர்ம மண்டலம் முதலியவர்கள் போஷகராவார்கள். மஹாமஹோபாத்தியாய பஞ்சாநந தர்க்க ரத்ந பட்டாசாரியார் வேலைக்கமிட்டித் தலைவராவர். ஸ்ரீமான்களான மஹாமஹோபாத்தியாய வாமாசரண பட்டாசாரியார், மஹாமஹோபாத்யாய லக்ஷ்மண சாஸ்திரிகள் உபதலைவர்கள். மஹாமஹோபாத்தியாய அனந்த கிருஷ்ண சாஸ்திரிகள், ராஜேசுவா சாஸ்திரிகள், தாரா சரணபட்டாசாரியார் இவர்கள் காரியதர்சிகளாவார்கள்.

தக்ஷிணதேசத்திலுள்ள பண்டிதர்களும் ஆஸ்திக லௌகிகர்களும் விஜயம்செய்யும்படி ஸபை பிரார்த்திக்கிறது. அப்பப்போது வேண்டியதகவல்களைத் தெரிவிக்கவும், அவசியமான உதவிபுரியவும், தக்ஷிணதேசத்தின் தீர்மானத்தையும் பண்டிதர்களையும் ஒன்று சேர்த்துத் திரட்டி ஸபைக்கு வரவும் அடியேனுக்கு கார்யதரிசி ஆணையிட்டுளார். வருகிறவர்களே ரெயில்சார்ஜுக்குப்பணம் ஸம்பாதித்து வரவேண்டும். வண்டி, போஜனம், வசதி, முதலிய மற்ற செலவுகளையே ஸபை ஏற்கும். தாங்கள் வருவதுடன் பண்டிதர்களுக்கு ரெயில் சத்தம் கொடுக்கும்படி பல தனிகர்களுக்கு விக்ஞாபனம் அனுப்பப்பட்டிருக்கிறது. பண்டிதர்கள் ஆங்காங்குள்ள தனிகரை அணுகி ரயில் சத்தம் மாத்திரம் பெற்று வரலாம். பல பிரபல பண்டிதர்களுக்கு அழைப்புக்கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. ஏனையோரிதையே அழைப்பாக எண்ணி நல்ல சமயத்தை வீணாக்காமல் தேசத்தை, மதத்தை, சாஸ்திரங்களை ப்ராமாண்யத்தைக் காக்க காசிக்கு வருவார்களாக. தக்ஷிண தேசத்தவரால் தான் வேத தர்மங்கள் நன்கு காக்கப்படுகின்றன என்பதை அனுபவ மூலமாக வடநாட்டிற்கும், உலகிற்கும் காட்ட இதே தருணம்.

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு ஸம்ஸ்கிருதத்திலேயே விடை எழுதி (6-10-28) க்குள் 107-நெ. தசாச்வமேத கட்டம் காசி என்ற விலாஸத்திற்கு அனுப்பவும். மற்ற தகவல் வேண்டுவோர் பதிலுக்குக் கார்டோ, ஸ்டாம்போ அனுப்பி 154-தம்புசெட்டி வீதி என எனக்கு எழுதி தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

॥ श्रीविश्वनाथश्शरणम् ॥

# ॥ अखिलभारतवर्षीय ब्राह्मणमहासम्मेलनम् ॥

॥ काशी ॥

कार्तिककृष्णनवमीतो दिनत्रयम् ६·११-२८·८·११-२८।

१०७ नं० दशाश्वमेधघाट रोड, बनारस २१-८ सन् १९२८;

## द्वितीयमभ्यर्थनम्—

महानुभावाः!

श्रीकाश्यामद्य कार्यनिर्वाहकसमित्येदमस्ति निर्धारितम्—यत् समालोच्येषु शुद्धि विवाहजातिपरिवृत्त्यादिषु प्रश्नावलीप्रथममेका या खल्वनन्तरपृष्ठे मुद्रापिता, पण्डितप्रवराणां श्रीमतां सविध उपस्थापनीया यस्या उत्तराणि समालोचयितुं तत्तद्देशीयानां विशिष्टानां पण्डितानामुपसमितिरेकाऽचिरेण संघटयिष्यते।

उपसमितिश्चेयं सम्मेलनात्पूर्वं कार्तिककृष्णप्रतिपदमारभ्य २७-१०-२८ कार्तिककृष्णाष्टमीपर्यन्तं सर्वेषामुत्तराणां समग्राणं विचारविनिमयेन तत्त्वविनिर्णयबुद्ध्या विमर्शनेन प्रारप्स्यतीत्यपि कार्यनिर्वाहकसमित्याज्ञयोपक्षिप्यते। आशास्यते पण्डितप्रवराः सर्वेऽप्याश्विनकृष्णाष्टमीतः पूर्वम् (६-१०-१९२८) स्वीयानामुक्तप्रश्नावल्युत्तराणां सदयं प्रेषणेनानुग्राहिष्यन्तीति। अन्ते पुनरिदं सप्रश्रयं प्रार्थ्यते-यदुत्तरसंग्रहावसरे निबन्धकारादृतमीमांसापद्धतिरेव यद्यवलम्ब्यते, तर्हि महाननुग्रहः स्यात्।

प्रश्नावल्या अस्याः समालोचनं ये कुर्वन्ति ये च न तेषां सर्वेषां महासम्मेलनावसरे विचारसभावसरे वा समुपस्थाय कार्येषु सहयोगं दित्सवः तत्तत्सभाद्वारा तत्तद्विद्यालयद्वारा, तत्तत्संस्थानद्वारा, स्वयं वा स्वनामधामाद्यचिरेण प्रेषयन्त्विति सप्रश्रयमभ्यर्थ्यते।

अधिकश्रावणशुद्धतृतीयायाम्<br>शनिवासरे। (१८-८-२८)

इति विधेयतमः<br>श्रीपञ्चाननतर्करत्नभट्टाचार्यः।

# प्रश्नावली—

१. स्त्रीणां पुंसां वा विवाहकालः कियदवधि कुत आरभ्य शास्त्रसम्मतः? २. तत्र वर्तमानपरिस्थित्यनुसारेण, शास्त्रानुसारेण च नियमनं कियदवधि योग्यम्? ३. रजःप्रवृत्त्यनन्तरं विवाहस्य मुख्यत्वमुत गौणत्वमाहोस्वित् आपत्कल्पत्वम्? ४. ऋतुदर्शने वृषलीत्वबोधकानां वचनानां तात्पर्यं किम्? ५. ब्राह्मणादिजातिषु अवान्तरश्रेणीनां परस्परं विवाहसम्बन्धः शास्त्रसम्मतो न वा? ६. धर्मज्ञाः के वा कीदृशं वा धर्मपरिवर्तनं कर्तुमर्हन्ति? किं सङ्कोचनाख्यम् (उत प्रवर्तनाख्यं धर्मपरिवर्तनम्)। ७. विधवाविवाहो दम्पत्योर्विवाहमोक्षश्च शास्त्रदृष्ट्या योग्यः, उताविरुद्धः, आहो निन्द्यः? ८. अस्पृश्यानामस्पृश्यत्वं जातितो वा कर्मतो वा? ९. म्लेच्छानामन्त्यजानां च स्पर्शविषये सभाप्रवेशविषये कूपोदकग्रहणविषये देवालयप्रवेशविषये चान्येभ्यः तारतम्यरक्षणं योग्यं न वा? यदि योग्यं तदा कीदृशं तारतम्यं रक्षणीयम्? १०. भागवतधर्मदीक्षा जात्युत्कर्षप्रापिका वा न वा? ११. यवनादिजातिः किं कर्मकृता, उत जन्मसिद्धा? १२. भागवतधर्मदीक्षाया जातिविशेषः प्रतिबन्धको वा न वा? १३. देवलस्मृतेः शूद्रपाण्यादिव्यवस्थानुसारेण प्रामाण्यं किमङ्गीकरणीयमुत न? १४. कियदवधि म्लेच्छसंसर्गेण प्रायश्चित्तीयता? १५. संवत्सरपर्यन्तं म्लेच्छसंसर्गिणां तदधिककालं यावत् म्लेच्छसंसर्गिणाञ्च प्रायश्चित्तविषये व्यवहार्यताविषये च किमैकरूप्यमुत वैरूप्यम्? १६. व्रात्यसंस्कारः कियत्परम्परापर्यन्तं शास्त्रसिद्धः? १७. जातिसामान्यमैहिककर्मकृतमव्यवस्थितमुत जन्मकृतं व्यवस्थितं च?

॥ श्रीविश्वनाथः शरणम् ॥

ஆர்யதர்மம் பு. 13, ஸ. 28, ப. 354-ல் உள்ள

# கிரஹண ஸம்சய நிவாரணீ.

सर्वेषामपि वर्षाणां मेरोरुत्तरतः स्थितिः ।

𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌪𑌿 𑌵𑌰𑍍𑌷𑌾𑌣𑌾𑌂 𑌮𑍇𑌰𑍋𑌰𑍁𑌤𑍍𑌤𑌰𑌤𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ।

என்றபடி ஸர்வவர்ஷாத்மகமான பூகோளத்தின் வடகோடிக்கு மேருவென்று பெயர். ஸகல வைதிககர்மாக்களிலும் நவக்ரஹ ஸ்தாபனம் செய்யும்பொழுது मेरुं प्रदक्षिणीकुर्वाणम् (𑌮𑍇𑌰𑍁𑌂 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍀𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌮𑍍) என்று சொல்லுகிற ஸம்பிரதாயத்தைக கவனிக்குமிடத்து எல்லா கிரஹங்களும் மேருவைச்சுற்றிவருகின்றனவென்று ஏற்படுகின்றது.

समा गतिस्तु योजनैर्नभःसदां सदा भवेत्कलादिकल्पनावशा-न्मृदुर्द्रुता च सा स्मृता 𑌸𑌮𑌾 𑌗𑌤𑌿𑌸𑍍𑌤𑍁 𑌯𑍋𑌜𑌨𑍈𑌰𑍍𑌨𑌭𑌃𑌸𑌦𑌾𑌂 𑌸𑌦𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍𑌕𑌲𑌾𑌦𑌿𑌕𑌲𑍍𑌪𑌨𑌾𑌵𑌶𑌾𑌨𑍍𑌮𑍃𑌦𑍁𑌰𑍍𑌦𑍍𑌰𑍁𑌤𑌾 𑌚 𑌸𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾 என்றதைக் கவனித்தால் ஆகாசத்தில் எல்லா க்ரஹங்களும் ஒரே வேகமாகவே ஸஞ்சரிக்கின்றனவென்று அறிகிருேம்.

कक्षाः सर्वा अपि दिविषदां चक्रलिप्ताङ्कितास्ता
वृत्ते लघ्व्यो लघुनि महति स्युर्महत्यश्च लिप्ताः ।
तस्मादेते शशिजभृगुजादित्यभौमेज्यमन्दा-
मन्दाक्रान्ता इव शशधराद्भान्ति यान्तः क्रमेण ॥

𑌕𑌕𑍍𑌷𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌅𑌪𑌿 𑌦𑌿𑌵𑌿𑌷𑌦𑌾𑌂 𑌚𑌕𑍍𑌰𑌲𑌿𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑌾
𑌵𑍃𑌤𑍍𑌤𑍇 𑌲𑌘𑍍𑌵𑍍𑌯𑍋 𑌲𑌘𑍁𑌨𑌿 𑌮𑌹𑌤𑌿 𑌸𑍍𑌯𑍁𑌰𑍍𑌮𑌹𑌤𑍍𑌯𑌶𑍍𑌚 𑌲𑌿𑌪𑍍𑌤𑌾𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌤𑍇 𑌶𑌶𑌿𑌜𑌭𑍃𑌗𑍁𑌜𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌭𑍌𑌮𑍇𑌜𑍍𑌯𑌮𑌨𑍍𑌦𑌾
𑌮𑌨𑍍𑌦𑌾𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾 𑌇𑌵 𑌶𑌶𑌧𑌰𑌾𑌦𑍍𑌭𑌾𑌨𑍍𑌤𑌿 𑌯𑌾𑌨𑍍𑌤𑌃 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 ।

என்பதால் மேருவை சந்திரன், புதன், சுக்கிரன், சூரியன், செவ்வாய், வியாழன், சனி என்ற வரிசையில் கிரமமாகப் பெரிதாக இருக்கும் விருத்தங்களில் சுற்றிவருகிருர்களென்றும் ஏற்படுகின்றது. இதில் சந்திரன், சூரியன் இரண்டுமாத்திரமே கிரஹணத்தில் விஷயமாதலால் இனி இதரக்கிரஹணங்களை விடுத்து இவர்களைப் பற்றியே கவனிப்போம்.

சுற்றிக்கொண்டிருக்கும் க்ரஹங்களுக்குள் பூமிக்குச் சமீபத்திலிருக்கிற சந்திரபிம்பமானது சூரியனுக்கும் பூமிக்கும் மத்தியில்

வருங்காலத்தில் ஸ்வயமாகப் பிரகாசமுள்ள சூரியகாந்தி சந்திரனின் ஒரு புறத்திற்பட ஷை சூரியகாந்தியையடையாதபக்கம் பூமிக்கு நேராக இருக்கும். ஆதலால் இந்தக்காலத்தில் சந்திர பிம்பம் பூமியிலுள்ளவர்களுக்கு வெறுங்கண்களுக்குத்தெரியாது இதுதான் அமாவாஸை. இதன் அந்தியக்ஷணத்தில் சூரியனும் சந்திரனும் ஸமாநபாகை கலர்களாகியிருப்பார்கள்.

**छादयत्यर्कमिन्दुर्विधुं भूमिभा, चन्द्रोध.स्थः स्थगयति रविमम्बुद-वत्समागतः पश्चात् । प्राग्देशमतश्चित्रं दृष्टिवशाद्भास्करग्रहणम् ॥**

சாதயத்யர்க்கமிந்துர்விதும் பூமிபா என்றும், சந்த்ரோ
த:ஸ்த: ஸ்தகயதி ரவிமம்புதவத்ஸமாகத: பச்சாத் । ப்ராக்தேச
மதச்சித்ரம் த்ருஷ்டிவசாத்பாஸ்கரக்ரஹணம் ॥

என்றுமிருப்பதால் சூரியக்ரஹணமானது சூரியனைச் சந்திரன் மறைப்பதால் ஏற்படுகின்றது என்றுகிறது.

சூரியனுடைய சுற்றோட்டப்பாதையாகிய கிராந்திமண்டலமும் சந்திரனுடைய சுற்றோட்டப்பாதையும் இரண்டிடங்களில் நேர்கோட்டிலேற்படுகின்றன. ஆதலாலவைகள் பூமியிலிருந்து பார்ப்பவர்களுக்கு ஒன்றோடொன்று சந்திப்பதாகத் தோன்றும். அவிடங்களுக்கே ராஹுவென்றும் கேதுவென்றும் பெயர். அங்கிருந்து 14-பாகைவரையிலுமுள்ள இடத்திற்கு ராகுமண்டலமென்றும் கேதுமண்டலமென்றும் பெயர். இந்த மண்டலங்களுக்குள் ஏதாவதொன்றில் சூரியனும் சந்திரனும் வருங்காலத்தில்மாத்திரம் சூரியக்ராஹணமேற்படுகின்றது. இதேமாதிரியாக ஒருமண்டலத்தில் சூரியனும் மற்றதில் சந்திரனுமாக வருங்காலத்தில்மாத்திரம் சந்திரக்ராஹணமேற்படும். சந்திரக்ராஹணமென்பது சந்திரனைப் பூமியின் நிழல் மறைப்பதால் ஏற்படுவது. இதை

**भूच्छायां स्वग्रहणे भास्करमर्कग्रहे प्रविशतीन्दुः ।**

பூச்சாயாம் ஸ்வக்ரஹணே பாஸ்கரமர்க்கக்ரஹே ப்ரவிசதீந்து:

என்றது முதலிய வாக்கியங்களாலறியலாம். ராகு கேதுமண்டலங்களில் க்ரஹங்கள் ஸஞ்சரிக்கும் காலங்களிலேயே க்ரஹணங்கள் ஏற்படுவதால் க்ரஹணத்திற்கு ராகு அல்லது கேது காரணமென்று வழங்கலாயிற்று. அதனால் தான் ஒவ்வொரு தர்ச பூர்ணிமைகளிலும் கிரஹணங்கள் ஏற்படுவதில்லை.

**दर्शः सूर्येन्दुसङ्गमः** தர்ச: ஸூர்யேந்துஸங்கம: என்றிருப்பதால் அவ்விதம் ஒரே ராசிபாகை கலைகளில் சூரியனும் சந்திரனும் இருக்கும்காலத்திற்கு, ஷை காலத்தில் மாத்திரமே பூமியிலிருந்து பார்ப்பவர்களுக்கு இரண்டுகிரஹங்களும் சேர்ந்திருப்பதா

கத்தோன்றுமாதலால், தர்சமென்று பெயர். இந்தக்காலமே அமாவாஸையின் அந்தியக்ஷணமாகும். இதிலிருந்து இரண்டு கிரஹங்களும் ஒருவரையொருவர் பிரிந்து செல்வதாகவே ஏற்படும். அம்மாதிரி ஏற்பட்ட அவர்களின் பிரிவில் ஒவ்வொரு 12 பாகைக்கும் ஒவ்வொரு திதியென்று பெயர். இவ்விதம் முறையே சுக்கில பக்ஷக் கடைசியில் பூர்ணமான பிரிவு அதாவது 180 பாகை வித்தியாஸமுள்ள தூரம் ஏற்படும் நேரத்திற்குப் பூர்ணிமை என்று பெயர். அதிலிருந்து குறைய ஆரம்பிக்கும் ஒவ்வொரு 12பாகை வித்தியாஸ காலத்திற்கும் முறையே முன்போலவே கிருஷ்ண பக்ஷத் திதிகளென்றும் அதில் கடைசி திதிக்கு அமாவாஸையென்றும் பெயர். அமாவாஸ்யை என்பதற்கு சூரியசந்திரர்கள்சேர்ந்து இருக்கத்தகுந்தகாலமென்றுபொருள். அமாவாஸ்யையைசிரஸாகவும், பூர்ணிமையைப்புச்சமாகவும் வைத்துப்பார்க்கில்இதற்குஒரு பக்கத்திலுள்ள திதிகளுக்கு சுக்லபக்ஷம் (ஆரம்பத்தில் வெளிச்சமாயிருக்கும் ராத்திரிகளுடைய பக்ஷம்) என்றும், மற்றதற்கு கிருஷ்ணபக்ஷம் (ஆரம்பத்தில் இருட்டுள்ள ராத்திரிகளையுடைய பக்ஷம்) என்றும் பெயர் அமைத்தது பொருந்துமென்று வெளியாகும். இனி பிரகிருதத்தைக் கவனிப்போம்.

பூமியை ஒரு பந்துவடிவமாகவும் அதைச்சுற்றி சந்திரமார்க்கத்தையும் அதைச்சுற்றி சூர்யமார்க்கத்தையும் வட்டங்களாக வரைந்து ஒவ்வொரு வட்டங்களிலும் 12-ராசிகளையும் குறித்து சந்திரமார்க்கத்தில் சந்திரன் நிற்கும் ராசியில் சந்திரனையும், சூரிய மார்க்கத்தில் சூரியன் நிற்கும் லக்னராசியில் சூரியனையும் பந்துக்கள்போல் வரைந்து, பூமியின் மத்தியிலிருந்தும், அதே மாதிரி இரண்டு ஓரங்களிலிருந்தும், சந்திரனுக்கு இரண்டு ஓரங்களிலும் சூரியனுடைய இரண்டு ஓரங்களிலும் முறையே படும்படியாகக் கோடுகளை வரையவும், பூமியின் மத்தியிலிருந்து புறப்படும கோடுகளுக்கு கர்ப்பஸூத்ரங்களென்றும், 'மற்றதுகளுக்கு திருக்ஸூத்ரங்களென்றும் பெயர். சந்திரமார்க்கத்தில் திருக்ஸூத்திரத்திற்கும் சந்திரனுக்கும் உள்ள வித்தியாஸத்திற்கு லம்பனமென்று பெயர்.

दृक्सूत्राल्लम्बितश्चन्द्रस्तेन तल्लम्बनं स्मृतम् ।

த்ருக்ஸூத்ரால்லம்பிதஶ்சந்த்ரஸ்தேந தல்லம்பநம் ஸ்ம்ருதம் ।

என்ற வசனத்தைக் கவனிக்கவும். இந்த லம்பனம் பூமத்தியிலுள்ளவர்களுக்குப் பூஜ்யமாயும், மற்றவர்களுக்கு யதாயோகம் ஜாஸ்தியாயும் இருக்கும். சூரிய உதயத்திலிருந்து நடுப்பகல் வரையிலும் சந்திரன் பூர்வலம்பிதனும், பிறகு பச்சிமலம்பிதனுயும் இருப்பான்.

சந்திரன் பூர்வலம்பிதனயிருக்கும் பொழுது ஷிலம்பன அளவிற்குத் தக்கபடி தர்சாந்தத்திற்குச் சில நாழிகைக்குள் முன்னதாகவே சூரியசந்திரர்கள் பிரிய ஆரம்பித்துவிட்டதாகவும், பச்சிமலம்பிதனகும்பொழுது தர்சாந்தத்திற்குப் பிறகுகூட ஷிலம்பனத்திற்குத் தக்கபடி பிரியாதிருப்பதாகவும் தோன்றும். இவ்விதமாகப் பிரிய ஆரம்பிக்குங்காலமே கிரஹணத்தின் மத்யகாலம் அல்லது பரமக்ராஸகாலம், அல்லது மோக்ஷாரம்பகாலம் என்று வழங்கப்படுகின்றது.

लम्बनं नाडिकाद्यं तिथ्यां स्वर्ण 𑌲𑌮𑍍𑌬𑌨𑌂 𑌨𑌾𑌡𑌿𑌕𑌾𑌦𑍍𑌯𑌂 𑌤𑌿𑌥𑍍𑌯𑌾𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌂

என்று முதலான வசனங்களைக் கவனிக்கவும், இதேமாதிரியாக

स्थितिरसहतिरंशावित्रिमं तैः पृथक्स्थं रहितसहितभाभ्यां लम्बने ये तु ताभ्याम् । स्थितिविरहितयुक्तः संस्कृतो मध्यकालः क्रमश इति भवेतां स्पर्शमुक्त्योऽस्तु कालौ ॥

𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌰𑌸𑌹𑌤𑌿𑌰𑌂𑌶𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑌿𑌮𑌂 𑌤𑍈𑌃 𑌪𑍃𑌥𑌕𑍍𑌸𑍍𑌥𑌂
𑌰𑌹𑌿𑌤𑌸𑌹𑌿𑌤𑌭𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌲𑌮𑍍𑌬𑌨𑍇 𑌯𑍇 𑌤𑍁 𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑍍 ।
𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌵𑌿𑌰𑌹𑌿𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍋 𑌮𑌧𑍍𑌯𑌕𑌾𑌲𑌃
𑌕𑍍𑌰𑌮𑌶 𑌇𑌤𑌿 𑌭𑌵𑍇𑌤𑌾𑌂 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑍋𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌲𑍌 ॥

என்ற வசனத்தைக் கவனிப்போமாயின் மத்யகாலத்திற்குத் தக்கபடி க்ரஹணத்தின் ஸ்பர்சகாலமும் மோக்ஷகாலமும் மாறுபடுமென்றும் தெரிகின்றது.

ஆதலால் சில வர்ஷங்களில் பூமியின் சிலபாகங்களில் அமாவாஸையில் பிடிக்கும் கிரஹணம் அமாவாஸையிலேயே முக்தமாகும் (விடுபடும்) என்றும் சில வர்ஷங்களில் சில பிரதேசங்களில் பிரதமையிலேயே கிரஹணம் பிடித்துப் பிரதமையிலேயே மோக்ஷமேற்படுமென்றும்; இம்மாதிரியாக ஏற்படும் சூரியக்கிரஹணங்கள் சொற்பபரிமாணமுள்ளதுகளாயும்; அதிக காலையிலும் அதிக மாலையிலும் மாத்திரம் ஏற்படுமென்றும், பூமத்தியத்தில் எப்பொழுதும் கிரஹணம் அமாவாஸையில்பிடித்து தர்சாந்தத்தில் பூர்ணக்ரஸ்தமாகி பிரதமையில் முக்தமாகும் என்றும் அறிக.

அமாவாஸ்யா திதி சிராத்த தினத்தை அடுத்த ஸஞ்சிகையில் வெளியிடலாமென இவ்வியாஸத்தை இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்,

D. S. பாலசுப்பிரமணிய சாஸ்திரீ,
பார்ஸ்டர் ஸ்கூல் தஞ்சாவூர்.
(ஸ்ரீமத் வாருசிவாக்யபஞ்சாங்க கணகன்,)

## திருக்கோவிலூர்தாலூகா மணலூர்பேட்டை

# ஆர்யமதாபிவர்த்தினீ ஸபை. 2.

ஸ்ரீஜகத்குரு ஸ்ரீமத்சங்கராபகவத்பாதாசார்யாரவர்கள் அநுக்ரகத்தைமுன்னிட்டு,நாளது விபவஸூ ஆடிமீ 14உ 29-7-28 ஆதிவாரம் மாலை 3-மணிக்கு ப்ருஹ்மஸ்ரீ பாலேசுவர சாஸ்திரிகள் தலைமையில் (2வது) ஸபை கூடிற்று. அதில் அனேகம் ஆஸ்திக பிராம்மணோத்தமர்கள் வந்திருந்தார்கள். ப்ருஹ்மஸ்ரீ திருவரங்கம் ராஜகோபாலதாதாசாரியார் அவர்கள் தத்காலம் தலைதூக்கி நிற்கும் விவாஹவயது மசோதாவைக் கண்டிக்கக்கருதி அனேக சுருதி ஸ்மிருதி அநுபவங்களைக்கொண்டு உபன்யஸித்து ஷை மசோதாப்படி ருதுமதிவிவாகம் செய்வதினால் ஜனங்களுக்கு நேரிடும் கலகங்கள் ஆசாரக்குறைவு வர்ணாச்ரமத்தவருதல் பெற்றோர்கள் அடையும் அபவாதங்கள் முதலிய இன்னும் அனேகவித விபரீதங்கள் ஸம்பவிக்கும் என்பதை நன்றுவிளக்கிக் காட்டியதோடு பெரியோர்களுடைய ஆசாரணையிலும், அனுபோகத்திலும் சாஸ்திரத்தினாலும்-இதுகாறும் பால்யவிவாகமே நடத்திவந்த வர்ணங்கள் இனியும் அப்படியே பால்யவிவாகம் செய்து வருவதை ஷை மசோதா தடுக்கமுன்வரக்கூடாதென்றும்,அப்படி சட்டம் பாஸாய் விட்டால் விக்டோரியாமகாராணி அவர்களுடைய வாக்குக்குத் தவறுதல் நேரிடுமென்றும், ஷை மசோதாவை எவ்விதத்திலும் சட்டமாக்கக்கூடாதென்றும் பேசிமுடித்தார். ப்ரஹ்மஸ்ரீ வாராஹ தாதாசாரியாரவர்கள் மங்களாசாஸன சுலோகம் சொல்லி நிறுத்தினார். தலைவர் உபசார வார்த்தைகளுடன் ஸபை கலைந்தது. ஸபைக்குவந்திருந்தவர்கள் யாவரும் மேல்கண்ட விஷயங்களுக்கு ஏகமனதாக ஆமோதித்தார்கள்.

இந்தத்தீர்மானத்தின்நகலைமிஸ்டர்கவர்னர் துரையவர்களுக்கும் ஜில்லா கலெக்டர் துரைஅவர்களுக்கும் ஸப்யர்களின் கையெழுத்துகளுடன் அனுப்புவிக்கவேண்டுமென்று இச்சபை காரியதரிசி அவர்களுக்கு ஸபையோர்களால் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

M. கிருஷ்ணஸ்வாமி அய்யர்,
ஸ்ரீமடம் முத்திரா கர்த்தா.